Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 03 | 19-08-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 1 2

## ஊர்தி வரி அட்டை பெறுவதற்கான கால எல்லை நீடிப்பு

மோட்டார் ஊர்திகளுக்கான 94-ம் ஆண்டுவரி அட்டை பெற்றுக் கொள்வதற்கான கால எல்லை இம்மாதம் 20-ம் திகதியுடன் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தும் ஊர்தி உரிமையாளர்கள் அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர் பிரிவிற்கென விசேடமாக இயங்கும் அலுவலகங்களில் வரி அட்டையைப்பெற்றுக் கொள்ளும் வசதி கருதி வரி அட்டை பெறுவதற்கான கால எல்லை (6ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமராக சந்திரிகா இன்று பதவி ஏற்பு; புதிய அமைச்சர்களும் நியமிக்கப்படுவர்

## ஐ. தே. க. 17 வருடங்களின் பின் அரசாங்கக்கட்சி அந்தஸ்தை இழந்தது

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய பிரதம மந்திரியாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவி சந்திரிகா குமாரணதுங்கா இன்று காலை 10.14 மணிக்குப் பதவி ஏற்கவுள்ளார். இதைத் தொடர்ந்து புதிய அமைச்சரவையும் பதவி ஏற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் கடந்த 17 வருட காலம் பாராளுமன்றத்தில் அரசாங்க கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி பதவி இழக்கின்றது.

ஜனாதிபதி டி-பி- விஜேதுங்காவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பண்டாரநாயக்கா பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொள்வார் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார்-

மேலும் இவ் அதிகார மாற்றம் மிக அமைதியான முறையில் நடைபெறும் எனவும் பொதுமக்களை அமைதி காக்கும் படியும் அவர் கேட்டுள்ளார்.

இவர் ஜனாதிபதி மாளிகையில் மேற்படி பதவி பிரமாணத்தைமேற்கொள்வார் என்றும் இதனை தொடர்ந்து இவரின் அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் தமது அமை ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பொ. ஐ. மு. பெரும்பான்மை குறித்து ஜனாதிபதி டி. பி. திருப்தி தெரிவிப்பு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு போதியளவு ஆசனங்கள் இருப்பதினால்தான் எந்த நிலைகுறித்து தான் முழு திருப்திகொண்டதாகவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார்.

...ணியின் பிரதி தலைவி சந்திரிகா குமாரணதுங்க மற்றும் இக் கட்சியின் பொது செய



## சந்திரிகா பண்டாரநாயக்க சில வாழ்க்கை குறிப்புகள்

★ 1945 ஆம் ஆண்டு பிறந்தவர்.

★ சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஸ்தாபகரும், முன்னாள் பிரதமருமான காலஞ்சென்ற எஸ் டபிள்யூ. ஆர் டி, பண்டாரநாயக்கா, முதலாவது பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரின் மகள்.

★ பிரபல சிங்கள நடிகரும், சிறிலங்கா மக்கள் கட்சி முன்னாள் தலைவருமான காலஞ்சென்ற விஜேகுமாரணதுங்காவின் மனைவி. ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## மிகக்கூடிய விருப்பு வாக்கு சந்திரிகாவிற்கு கிடைத்தது

(கொழும்பு)

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத்திற்கான தேர்தலில் சந்திரிகா குமாரணதுங்காவே ஆகக் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்-

சம்பஹா மாவட்டத்தில் இவர் நான்குலட்சத்து அறுபத்திநான்காயிரத்துஐந்நூற்று எண்பத்தி எட்டுவாக்குகளை பெற்றுள்ளார்-

இதே வேளை கொழும்பு ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## முக்கிய அமைச்சர்கள் பிரமுகர்கள் தோல்வி

(கொழும்பு)

நடைபெற்ற பொது தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் முக்கிய அமைச்சர்கள் உட்பட பல ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய பிரமுகர்கள் தோல்வியைத் தழுவியுள்ளனர்.

அமைச்சர்சுனேத்திரா ரணசிங்கா, இராஜாங்க அமைச்சர் ஜாபீர் ஏ. காதர், அனுராபஸ்தியன் மற்றும் ஜினதாச நியதபால, சங்கதாச ரட்னசிறி ராஜபக்ஷ ஆகியோர் தோல்வி அடைந்துள்ளனர்.

## செல்லா, தேவராஜுக்கு எம், பி பதவி இல்லை

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் இம்முறை தமிழ் உறுப்பினர் எவரும் தெரிவு செய்யப்படவில்லை

போட்டியிட்ட ராஜரட்னம் 6910 வாக்குகளையும் மட்டுமே பெற்றனர்

இதே வேளை ஐ. தே. க வின் பட்டியலில் இதொகா

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு போதியளவு ஆசனங்கள் இருப்பதினால்தான் எந்த வித தடையும் விதிக்க தயாராக இல்லை என்றும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை நிலைகுறித்து தான் முழு திருப்திகொண்டதாகவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார்.

நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பிரதி தலைவி சந்திரிகா குமாரணதுங்க மற்றும் இக் கட்சியின் பொது செய

( 6 ஆம் பக்கம் பார்க்க )

னாள் தலைவருமான காலஞ்சென்ற விஜேகுமாரணதுங்காவின் மனைவி.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

இம்முறை தமிழ் உறுப்பினர் எவரும் தெரிவு செய்யப்படவில்லை

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்ட எம். எஸ். செல்லச்சாமி 12 474 விருப்பு தெரிவு வாக்குகளையும் இக் கட்சியில் டுமே பெற்றனர்

இதே வேளை ஐ. தே. க வின் பட்டியலில் இதொ கா சார்பில் போட்டியிட்ட கோவிந்தன் 37029 வாக்குகளையும் டி பி தேவராஜ் 33 414 வாக்குகளையும் மட்டுமே பெற்றுக் கொண்டனர்

## முயற்சி தோற்றபின்பே சந்திரிகாவிற்கு அழைப்பு

(கொழும்பு)

ஐ. தே. கட்சி தொடர்ந்தும் ஆட்சியில் அமர்வதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டபின்பே பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் ஆட்சியை ஒப்படைக்க தீர்மானித்தது-

இம் முயற்சியில் ஜனாதிபதி ஒரு புறமும், காமினி திசாநாயக்கா ஒரு புறமுமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன-ஜனாதிபதி டி-பி-

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பத்தாவது பாராளுமன்றம் 25-ம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்காவின் 10வது பாராளுமன்றம் எதிர்வரும் 25-ம் திகதி வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது அன்றைய தினம் பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

இந்தப் பாராளுமன்றத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 105 அங்கத்தவர்களும் ஐ. தே. கட்சி

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடமே இருக்கும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியை அமைத்தாலும் பாதுகாப்பு அமைச்சர் நிதி அமைச்சர் பதவிகள் தொடர்ந்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் இருக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே எதிர்வரும் காலங்களில் நிர்வாக அதிகாரம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



### லெப். காத்தான்

பூநகரிப் பகுதியில் கடந்த 11-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற திடீர் மோதலில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்று முன்தினம் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் காத்தான் (ஜேம்ஸ் இன்பராசா உருத்திரபுரம் கிளிநொச்சி) என்னும்போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## கூட்டணி, புளொட் சந்திரிகாவுக்கு ஆதரவு

(கொழும்பு)

தமிழர் விடுதலை கூட்டணியும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் (புளொட்) பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு தமது முழுமையான ஒத்துழைப்பை நல்கப்போவதாக தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் தற்போது தமக்கு நூற்றி இருபத்தி ஒரு உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பதாக நேற்று மாலை சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

## பொ. ஐ. முன்னணியுடன் ஈ. பி. டி. பி. பேச்சு?

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிப்பது தொடர்பாக, யாழ்- மாவட்டத்திலிருந்து தெரிவான ஒன்பது சுயேட்சை உறுப்பினர்களின் நிலைப்பாடு பற்றி, அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, முன்னணியுடன் கலந்தாலோசித்து வருவதாக இந்திய வானொலி

(6ஆம் பக்கம் பார்க்க)

## அலரிமாளிகையிலிருந்து ரணில் வெளியேற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையிலிருந்து ரணில் விக்கிரமசிங்க வெளியேறிவிட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. அரசு அமைக்க காமினி தீவிர முயற்சி

(கொழும்பு)

பாராளுமன்ற ஆட்சியை மீண்டும் ஐ. தே. க. வசப்படுத்திக்கொள்ள காமினி திசாநாயக்கா அபார முயற்சிகளை நேற்று முழுவதும் மேற்கொண்டார் என்றும் கொழும்பில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

காமினி திசாநாயக்கா மீண்டும் பாராளுமன்ற ஆட்சியை அமைக்கும் நோக்குடன் தமிழர் விடுதலை கூட்டணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) ஆகியவற்றுடன்பேச்சு வார்த்தைநடத்தியதாக அச்செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## ஊரடங்கை நீக்குமாறு சந்திரிகா கோரிக்கை

ஊரடங்கு சட்டம் அமுல் இருக்கும் போது தான் பிரதமர் பதவி ஏற்க விரும்பவில்லை என்றும் எனவே ஊரடங்கு சட்டத்தை அன்றைய தினம் நீக்குமாறும் சந்திரிகா குமாரணதுங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதமர் பதவியை ஏற்குமாறு நேற்று முன்தினம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சந்திரிகா குமாரணதுங்காவிடம் வேண்டுகோள் விடுத்ததை தொடர்ந்து ஜனாதிபதியிடம் அவர் விடுத்த முதல் வேண்டுகோள் இதுவென தெரியவருகின்றது.

## வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும்

### முடிவில் மாற்றம் இல்லை என்கிறார் சந்திரிகா

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பது என்ற எனது முடிவில் மாற்றம் எதுவும் இல்லை என பிரதமர் பதவியை இன்று ஏற்கவிருக்கும் சந்திரிகா குமாரணதுங்க நேற்று நண்பகல் பிரான்ஸ் வானொலிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து கூறுகையில் பிரதமர் பதவியை ஏற்பது என்பது மிகவும் சிக்கலானது என்பதை நான் நன்கு உணர்வேன். இது குறித்து நேரடியான அனுபவம் என்னிடம் இல்லாதபோதும் எனது

(6ஆம் பக்கம் பார்க்க)

### வாசகர்களுக்கு

தவிர்க்க முடியாத காரணத்தினால் இவ்வாரம் வெள்ளி மஞ்சரி வெளிவரவில்லை என்பதை மனவருத்தத்துடன் வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். இதேவேளை அடுத்த வாரம் வழமைபோல் வெள்ளிமஞ்சரி வெளிவரும்.

## பாராளுமன்றிற்கு மாவட்ட ரீதியாக தெரிவாகிய உறுப்பினர் விபரம்;

மாவட்டம் கம்பஹா

பொ. ஐ. மு.

| | | |
|---|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா | - | 464588 |
| ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே | - | 102129 |
| லக்ஸ்மன் ஜயக்கொடி | - | 88628 |
| பீலிக்ஸ் பெரேரா | - | 80539 |
| நிமலசிறி ஜயசிங்க | - | 65623 |
| ஹெஜிபத்மசேன றணதுங்க | - | 61458 |
| ஜினதாச நந்தசேன | - | 58237 |
| லயனல் குணவர்த்தன | - | 57091 |
| நீல் ருபசிங்க | - | 57090 |
| உபாலி குணரத்ன | - | 55328 |
| விக்டர் சுரவீர | - | 50740 |

ஐ தே க

| | | |
|---|---|---|
| ஜோன் அமர துங்கா | - | 122813 |
| விஜேபால மெண்டிஸ் | - | 96559 |
| ஜோசப்மைக்கல்பெரேரா | - | 93884 |
| பெரேரா றெஜீனோல்ட் | - | 73508 |
| நிமால் ராஜபக்ச | - | 63067 |
| அனுர பிரதீப் அபங்கம | - | 62829 |
| சரத் சந்திர ராஜ கருண | - | 59992 |

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

### சாரதா

கோமல் சுவாமிநாதன் பேட்டியுடனும் இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்களுடனும் இலங்கைச் சிறப்பிதழாக இப்பொழுது விற்பனையாகிறது. (9098)

### பொது அறிவு

பொது அறிவு நூல் வெளிவந்து விட்டது ஆக்கம்:- கலாநிதி க. குணராசா. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை. (9106)

### மாட்டெரு

மாட்டெரு விற்பனைக்குள்ளது. தொடர்பு- 525/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (/சி10130)

### நாவல்கள்

நல்லூர் உற்சவகால பூபாலசிங்கம் புத்தகசாலையில் செங்கை ஆழியானின் நாவல்களை 20 சதவீத விசேஷ கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம் பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (9105)

### தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை தங்கம்மா என்பவருடைய அடையாள அட்டை, குடும்ப அட்டைச் செயலகம் ஆரியகுளம் சந்திக்கும் -கொழும்புத்துறைக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (9137)

### இறைச்சிக்கோழி

புறொயிலர்கள், சேவல்கள், வளர்ப்புக்கு உகந்த சேவல் குஞ்சுகள், 2 மாத, 3 மாத பேட்டுக்குஞ்சுகள் விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கு விலைக்கழிவு உண்டு. யாழ்ப்பாணவீதி, உரும்பிராய்ச்சந்தி. (9144)

### பாலர் ஆசிரியராக--

பயிற்சி விரைவில்-க.பொ.த சாதாரணதரம் கடைசித் தகைமை சனி ஞாயிறு நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் கற்கலாம் பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (9133)

### ஆனந்தம் சீயாக்காய்

சிரசின் தனித்துவத்தைப் பேணுவதற்கு கைதடி சுதேச வைத்திய சங்கத்தலைவர் சிபார்சுப்படி மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்து தயாரிக்கப் பெற்றது ஆனந்தம் சீயாக்காய் பவுடர், கேட்டு வாங்கிப் பயன் பெறவும். (8969)

### துளிர்

தமிழ் நாடு, புதுவையில் பள்ளி மாணவரிடையே பெரும் வரவேற்பைப் பெற்று பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் சிறுவர்க்கான அறிவியல் மாத இதழ் இப்பொழுது யூன், யூலை இதழ்கள் எங்கும் விற்பனையாகிறது. (9097)


## போட்டோ அல்பம் இனாம்

★ கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்

★ கொம்பியூட்டர் றபர்சீல் [COMPUTER RUBBER STAMPS] (இரண்டு வருட உத்தரவாதம்)

★ லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)

★ புகைப்பட பிரதியாக்கம் [RE COPY] மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## ★ கொழும்பு கலைக்கூடம் ★

(கொழும்பு ஸ்ரூடியோ)

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில் நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள் (சி-10134)


## இலவச மருந்தாளர் பயிற்சி
## (PHARMACIST COURSE)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் மேற்படி பயிற்சி நடைபெறவுள்ளது. பயில விரும்புவோர் தாம் வதியும் இலங்கை செஞ்சிலுவை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மூலமாக தமது விண்ணப்பங்களை 25.08-94க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். நேர்முகப் பரீட்சை 27.08-94 மு ப 9.00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும். 01-09-94இல் பயிற்சி ஆரம்பமாகும்.

**விண்ணப்பதாரியின் தகைமைகள்:-**

க. பொ. த (சா. த) பரீட்சையில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்/க. பொ. த (உ. த) பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தோர் விரும்பத் தக்கது. வயதெல்லை 17—25 வறுமைக் கோட்டினை நிரூபிப்பவர்களுக்கு வயதெல்லை 26—30 பயிலுநருக்கு தேசிய பயிலுநர் சபையினாலான கொடுப்பனவு உண்டு.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம், 18-08-94

கௌரவ செயலாளர் இ. செ. சி. சங்கம், யாழ். கிளை.

(சி-10139)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 24.08-193?

ஆண்டவன் அடியில் 10-09-1992



### இராசையா நவரட்ணம்

(ஆசிரியர், யா-மெமோறியல் ஆங்கிலக்கல்லூரி, மானிப்பாய்)

எங்கள் அன்பிற்கினிய தந்தையே
திக்கற்று தடுமாறி நிற்கின்றோம்
காலமெல்லாம் மாறாது எம்துயரமப்பா!

நவாலி வடக்கு, மானிப்பாய்.

மனைவி- இந்திராணி
மக்கள்-நரேந்திரன், இந்துசா
மைத்துனர், மைத்துனிமார்கள்

(சி-10140)

## நினைவு கூருகின்றோம்...
## 19-08-1994...

1988-ம் ஆண்டு இதே தினத்தில் மணலாறு-நித்திகைக்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எமைப்பிரிந்த,

**கோபு** (கதிர்காமத்தம்பி தர்மராசா - புதூர் - பட்டு)

முல்லைத்தீவில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். றொபேட்** (சுந்தரம் லோகநாதன் - கிருஷ்ணபுரம் - கிளிநொச்சி)

1989-ம் ஆண்டு அம்பாறை-கல்முனைப் பகுதியில் இந்தியப்படையினரால் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த,

**லெப். தேவா** (நாராயணன் சாமித்தம்பிகுமார் - பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை)

மாங்குளம் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் படையினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளரான,

**கப்டன் வண்ணன்** (சிவரத்தினம் கலைஜீவன்- இல: 65, கனகபுரம் - கிளிநொச்சி)

1990-ம் ஆண்டு சுகயீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**பிரியதர்சன்** (பத்மநாதன் பரமேஸ்வரன் - பெரிய தோட்டம், புத்தூர் கிழக்கு - யாழ்)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும், இந்திய-இலங்கை படையினராலும் தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10133)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 29-08-1975



ஆண்டவன் அடியில் 29-08-1993

### உருத்திராபதி உதயகுமார்

(உதயன்)

திதி:- 19-08-1994

உதயன் என அழைத்த - எம்
உதயமே!
இதயத்தை துயர் நிறைக்க
விழிகளில் நீர் சுமந்து
உன் நினைவுகளுடன்
நித்தமும் நாம் ..

கோப்பாய், தெற்கு.

உன் அன்புச் சகோதரி, குடும்பத்தினர்

(9114)

## புதுமை நாடக வரலாறு காணாத புதுமை

நாடக ரசிகப் பெருமக்களுக்கும் நம் இனிய தமிழீழ மக்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நித்தமும் நாம ..

கோப்பாய்,
தெற்கு.

உன் அன்புச் சகோதரி,
குடும்பத்தினர்

(9114)



யாழ் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும்,
காரைநகர் விக்காவில் கலைஞர்களும்

இணைந்து மேடையேற்றும்

## முத்ததம்பி தேவதாசனின்

# "பூதத்தம்பி"

யாழ்ப்பாண வரலாற்று இசை நாடகம்

இடம்: அராலி இந்துக்கல்லூரி மைதானம்
காலம்: 19-08-1994 வெள்ளிக்கிழமை இரவு 7-30 மணி

★ யாழ்ப்பாண வரலாற்றை அறிய மாணவர்கள் பாருங்கள்

★ ஈழப் பெண் ஒருத்தியின் ஈடுஇணையற்ற துணிவைக் காண இல்லத்தரசிகள் பாருங்கள்.

★ அந்நியர் ஆட்சியின் அரச பயங்கரத்தைக் காண அனைவரும் பாருங்கள்.

★ அப்பாவிப் பெண் ஒருத்தியின் வீட்டுவாசலை ஆனந்தமாய் தட்டிய தென்றல் கொடும் புயலாக மாறிக் கோர தாண்டவமாடிய கோலத்தைக் காண அனைவரும் வாருங்கள்.

ரிக்கட்டுகளை மைதான நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

ரிக்கட் விபரம்: பெரியோர்களுக்கு 20ரூபா சிறியோர்களுக்கு 10 ரூபா

ஆதரவு நல்கும் N. N. R. போக்குவரத்து சேவை
பிரான்பற்று

(9143)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:- 24. 08. 1943

அநியாய அழிப்பு:- 29. 08. 1993

### அமரர் ஐயன் மயில்வாகனம்

(ஓய்வு பெற்ற புகையிரத சேவையாளர்களின் மேற்பார்வையாளர்)

திதி:- 19. 08 1994

அன்பின் திரு உருவமே ஐயா
அரக்கனின் அராஜகத்தால் வந்ததே வல் விதி
சென்று வாறேன் என்று நீங்கள் சென்ற வழி பார்த்து
சோர்ந்து போகும் வேளையிலே
சேதி ஒன்று வந்ததையா
சத்தியமாய் நாங்கள் நம்பவில்லை - தங்கள்
செவ்வுடலில் காயமென்றே நாமிருந்தோம்
பாதகனின் குண்டு உம்முடலைத் துளைத்து
பாதிவழி சென்று விட்டீர் எமைப்பிரிந்து
ஆண்டொன்று போனாலும் ஆறாதையா எம் உள்ளம்
உங்களது இலட்சியங்கள் நிறைவேறவும்
ஆத்மா சாந்தியடையவும் கண்ணீர்
பூக்கள் கொண்டு பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும்
உற்றார், உறவினர்.

வீரபத்திரர்
கோவில் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(9145)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சேரன் பல்பொருள் வாணிபம்

நெல்லியடி கிளையின் **1ஆம் ஆண்டு நிறைவு 23-8-94**

**அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றிகள்!**

தொடர்ந்து திறம்பட இயங்கி..
உங்களிற்கு சிறப்பான பணி செய்திட...
உங்களின் அன்பான வாழ்த்தினை வேண்டுகின்றோம்!

## சேரனின் வளர்ச்சி!
## மக்களின் மகிழ்ச்சி!

கடந்த ஓராண்டு வளர்ச்சிக் காலத்தில்
வடமராட்சியில் நடமாடும் சேவையையும் நடத்தி
சிறப்பான பணி செய்து வருகின்றது.

**வடமராட்சியில் சேரன் பல்பொருள் வாணிபம் நெல்லியடிக் கிளையின் 1ஆம் ஆண்டினை பூர்த்தி செய்யும் இவ் வேளையில் மற்றுமோர் மகிழ்ச்சியான வளர்ச்சி!**

பருத்தித்துறை மக்களின் விருப்பினை பூர்த்தி செய்ய உங்களை நாடி சேரன் வருகின்றான்

## பருத்தித்துறை நகரில் சேரனின் மற்றுமோர் கிளை

**19-08-94 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு**

பிரதான வீதியில் (மரக்கறிச் சந்தைக்கு அருகாமையில்) தனதுபணியை ஆரம்பிக்கின்றது!
வாழ்த்தும், சேரன் பல்பொருள் வாணிப கூட்டில் இருக்கும் ஏனைய வாணிப அமைப்புக்கள்

**யாழ்ப்பாணன் விற்பனை நிலையம்**
அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

பலசரக்கு வகைகள், பால்மா வகைகள் உங்களுக்கு தேவையான மற்றும் பல பொருட்களை சில்லறையாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

★

**விக்ரர்இயந்திரஉதிரிப்பொருள்வாணிபம்**
அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

துவிச்சக்கரவண்டிகள், அதன் உதிரிப்பொருட்கள் மற்றும் பல்வேறுபட்ட இயந்திர உதிரிப்பொருட் களையும் மலிவான விலையில் பெற்றிட நாடுங்கள்

★

---

**எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை கொன்வென்ஷன் 1994**

TRUMPET SOUND MINISTRIES

விழித்திருங்கள் விசுவாசத்தில் நிலைத்திருங்கள்.
கொருந்தியர் 16 ; 13

ஆவணி மாதம் 18-ம் திகதி தொடக்கம் 20-ம் திகதிவரை தெய்வீக சுகமளிக்கும் ஆராதனை.

**இடம்:** எக்காளத்தொனி சபை,
இல. 21,கச்சேரி - நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.

**நேரம்:** மாலை 4-00 மணி தொடக்கம் மாலை 6-00 மணிவரை வியாதியஸ்தர்கள் சுகமடைய ஜெபிக்கப்படும்.

பிரவேசம் - இலவசம்

(9130)

---

## நன்றி நவிலல்

15. 08. 94 அன்று வீரச்சாவடைந்த பருத்தித்துறையைச் சேர்ந்த கனகராஜா பிறேம்சந்திரன் (கப்டன் இசைமாறன், கவாஸ்கர்) அவர்களின் இறுதி நிகழ்விலும் (17.08.94) அதற்கான ஒழுங்குகளிலும், பல்வேறு வகையிலும் மனமுவந்து உதவியும், ஒத்தாசையும் புரிந்து ஆறுதல் வார்த்தைகள் கூறி எமது சோகத்தைப் பகிர்ந்து கொண்ட போராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைக் கூறிக் கொள்கிறோம்.

நன்றி.

தற்போதைய முகவரி:
புற்றளை, தாய், சகோதரர்கள்.
புலோலி தெற்கு, புலோலி. (9140)

---

## புது வசந்தம் பிற்போடப்பட்டுள்ளது

தவிர்க்க முடியாத காரணங்களினால் 20-08-94 சனிக்கிழமை கைலாசபதி கலை அரங்கில் நடைபெற இருந்த அபர்ணாலயாவின் 'புது வசந்தம்' இசை நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

-அபர்ணாலயா இசைக்கல்லூரி

(9141)

---

**வீடு-வளவு**

## காணி விற்பனைக்கு

ஊரெழுவில்பலாலிவீதியில் வீடு வளவும்;உரும்பிராய் வடக்கு, ஊரெழு எல்லை (மடத்தடி) யில் தோட்டக் காணி நிலப்பரப்பு 10, கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
சு. பரமராஜா (சட்டத்தரணி)
இல.1, 2-ம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

(9139)

அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

மற்றும் பல்வேறுபட்ட இயந்திர உதிரிப்பொருட் களையும் மலிவான விலையில் பெற்றிட நாடுங்கள்

★

எழினி புடைவை வாணிபம்
லெப். கேணல் இராசன் சாலை, யாழ்ப்பாணம்.

புடைவைகள், துணிவகைகள், தைக்கப்பட்ட ஆடைகள் போன்ற உங்கள் உடைத் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

★

எழிற்கூடம்
அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதன பொருட்கள், சமையலுக்கு தேவையான சகல விதமான பாத்திர வகைகளையும் ஒரே இடத்தில் பெற்றிட நாடுங்கள்

★

சேரன் மருந்து வாணிபம்
அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

சகல விதமான மருந்து வகைகள் பால்மா வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட நாடுங்கள்.

★

சேரன் காகிதாதிகள் வாணிபம்
சந்தோசம் சாலை, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

பாடசாலை புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள், அச்சுக்கூடத் தேவைக்கான காகிதாதிவகைகள் அனைத்துக்கும் நாடுங்கள்

★

சேரன் வேளாண் இடுபொருள் வாணிபம்
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

விவசாய உரவகைகள் கிருமிநாசினி மருந்துகள் என்பவற்றுக்கு நாடுங்கள்.

★

சேரன் பல்பொருள் வாணிபம்
அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.
கண்டி வீதி, சாவகச்சேரி
கண்டி வீதி, கொடிகாமம்
காங்கேசன்துறைவீதி, சுன்னாகம்

சகல விதமான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தென்மராட்சி வாடிக்கையாளர்களுக்கோர் நற்செய்தி!

19-08-94-ல் தென்மராட்சியிலும் எமது நடமாடும் சேவை ஆரம்பமாகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

தரமான பொருட்கள் மலிவான விலையில். தட்டுப்பாடான பொருட்கள் வாடிக்கையாளருக்கு முன்னுரிமை. வாருங்கள்!

- நன்றி -

சேரன் பல்பொருள் வாணிபம்

(சி10143)

சி. பிரமராஜா (கட்டத்தரணி)
இல. 1, 2-ம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

(9139)

இம்மாத,
உங்கள் அபிமான

நங்கூரம்

குடாநாட்டின் சகல புத்தகசாலைகளிலும்

★ தங்கப்பதக்கத்துக்கான நுழைவுப்படிவம் இணைக்கப் பட்டிருக்கிறதா என சரிபார்த்து வாங்கவும்.

(சி-10136)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் நடாத்தும்
முழுநிலாநாட் கருத்தரங்கு

காலம்: 20-8-1994-ம் திகதி சனிக்கிழமை
பிற்பகல் 3-00 மணி
இடம்: குமாரசுவாமி மண்டபம்

கருத்துரை I :- நவீனகால சீர்திருத்த இயக்கங்கள் பிரம சமாஜம் பற்றிய நோக்கு
வழங்குபவர்:- திருமதி சு. அருள்நங்கை
இயக்குநர், புதிய உயர்கல்வி நிலையம், யாழ்ப்பாணம்.
கருத்துரை II :- 'அரசியல் நெருக்கடிக்குள் இலங்கை'
வழங்குபவர் :- திரு. மு. திருநாவுக்கரசு

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
யா. இ. க. ப. மா. சங்கம்

விளம்பர அன்பளிப்பு:

C.C.A. கல்விநிலையம்
வெலிங்டன் தியேட்டர் சமீபமாக
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-10138)



உ

# ஈவினை மத்தி கற்பக விநாயகப் பெருமான்
# புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா

**19-8-94 காலை 6.00 மணி**

## என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஈவினையூர்ச் சோதியாம் துங்கத் தும்பிமுகக் கற்பகவிநாயகப் பெருமானுக்குப் புதிய சித்திரத்தேரை அமைத்து வெள்ளோட்ட விழாக்காணும் நன்னாளாம் 19; 08. 94ஆம் திகதி வெள்ளிக்கிழமை அவ்வூர் மக்களுக்குச் சரித்திரம் காணாத ஒரு பொன்னாளாகும்.

பிரணவ சொரூபியாம் விநாயகப் பெருமானுக்கு நாம் ஆற்றும் கைங்கரியங்கள் எல்லாம் அதி உயர்ந்த தெய்வத் தொண்டுகளாகும். அவரின் திருவருட்கடாக்ஷம் பெற்றுய்ந்தவர்கள் வேதவிநாயகர், ஔவைப்பிராட்டியார் முதல் அடியார்கள் பலராவர்.

இப்புதிய சித்திரத்தேரை மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது குறுகிய காலத்துள் எம்பெருமான் துணை கொண்டு அமைத்துத் தந்த சிற்பச்சக்கரவர்த்தி ஸ்தபதி திருநெல்வேலி ஆறுமுகம் ஜீவரத்தினம் அவர்களின் கைவண்ணம், இறைபக்தி என்றுமே போற்றற்குரியது.

இப்புதிய சித்திரத்தேரை உருவாக்க மனங்கோடாது பொருளீந்த பெருந்தகைகளுக்கும், சிறப்பாக ஈவினை மத்தி கற்பக விநாயகர் சைவபரிபாலன சபையார்க்கும் விநாயகப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி எனது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**சிவஸ்ரீ தி கெங்காதரக்குருக்கள்,**
ஈவினை மத்தி கற்பக விநாயகர் திருக்கோவில்,
தேவஸ்தானம்.

## தேவருலகின் கற்பகதரு


செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்போர் ஈவினையம்பதி வாழ் மக்கள். அதன் காரணமாகவே (ஈ=ஈதல்; வினை=தொழில்) அப்பெயர் பெற்றது அப்பதி. அதற்கேற்ப கேட்ட வரமளிக்கும் தேவருலகின் கற்பகதருப்போன்று, கற்பக விநாயகப் பெருமான் அங்கு கோயில் கொண்டு அப்பதி வாழ் மக்களுக்கும், தினமும் தன்னை அண்டிவருவோருக்கும் அபயகரமளித்துக்கொண்டே இருக்கின்றார்.

அவரது திருவருளினால், ஊர் மக்களும், ஈவினைமத்தி கற்பக விநாயகர் சைவபரிபாலன சபையினரும் எம் பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் ஒன்றை நிர்மாணிக்கத் திருவுளங் கொண்டனர். அவர்களது முயற்சிக்கு உறுதுணையாக வெளிநாடுகளில் வதியும் அவ்வூர் ஐங்கரன் அடியார்களும் மனங்கோடாது உதவியமையால், மிகக் குறுகிய ஒரு வருடகால எல்லையில் புதிய சித்திரத் தேர் நிர்மாணிக்கப்பட்டு வான்தோய நீண்டுயர்ந்து வெள்ளோட்ட விழாவும், இரதோற்சவ விழாவும் இன்று காண்கின்றது.

இத்தேரை ஆக்கும் பணியில் அல்லும் பகலும் அயராது உழைத்த சிற்ப ரத வித்தகர், சிற்பக்கலாமணி, சிற்பச்சக்கரவர்த்தி ஸ்தபதி திருநெல்வேலி ஆறுமுகம் ஜீவரத்தினம் அவர்களுக்கும், அவர் தம் குழுவினருக்கும், பலவழிகளிலும் உதவிய ஐங்கரன் அடியார்களுக்கும் எல்லாம் வல்ல கற்பக விநாயகப் பெருமானின் திருவருட்கடாட்சம் பொலிய வேண்டி நிற்கின்றோம்.

''வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்.''

**ஈவினை மத்தி கற்பக விநாயகர்**
**சைவ பரிபாலன சபை.**



## பிரார்த்தனை உரை

ஓங்கார மூர்த்தியாகிய விநாயகப் பெருமான் தன்னேரிலாத தலைவராவர். ஈவினை என்னும் திவ்விய க்ஷேத்திரத்தின் கண்ணே ''கற்பக விநாயகர்'' என்னும் திருநாமத்துடன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். விரும்பியவற்றையெல்லாம் கொடுப்பது கற்பகதரு. மெய்யடியார்களும் வேண்டுவனவற்றையெல்லாம் கொடுத்தருளுகின்றார் கற்பகவிநாயகர்.

எம்பெருமான் ஆரோகணித்துப் பக்தர்களுக்கு அருளும் வண்ணம் புதிய சித்திரத் தேரினை உருவாக்கியிருப்பது திருவருட் செயலேயாகும்.

பலவகைச் சிறப்புக்களோடும் கூடிய சித்திரத்தேரினை ஈவினைப்பதி அடியார்களின் உளங்குளிர நிர்மாணித்த சிற்ப ரத வித்தகர், திருநெல்வேலி ஆறுமுகம் ஜீவரத்தினம் அவர்கள். வாகனம், சப்பரம், மஞ்சம், பத்மாசனம், தேர் என்பனவற்றைச் சாஸ்திர முறைப்படி செய்வதில் மிகவும் கைதேர்ந்தவர்.

அவரது தலைமையில் இடம்பெறவுள்ள சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா சிறப்புற அமைய வேண்டுமென்றும் புதிய சித்திரத் திருத்தேரில் எல்லாம் வல்ல கற்பக விநாயகர் ஆரோகணித்து அருட்காட்சி வழங்குவதன் மூலம் அடியார்கள் பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்ய வேண்டுமென்றும், கற்பக விநாயகரின் பொற்பதங்களை மனதில் இருத்திப் பிரார்த்திப்போமாக!

**ஆசிரியமணி**
**அ. பஞ்சாட்சரம்**
உரும்பிராய்

## மன அழுக்கை அகற்றும் போர்

சைவ ஆலய வழிபாட்டில் நித்திய நைமித்திய, விசேடவிழா, மகா உற்சவ விழா என்று நிகழும் பலவற்றுள்ளும் தேர்த்திருவிழாவிற்கு எதுவும் நிகராகாது.

கொடியேற்றம் தீர்த்தம் படைத்தல் அருளலை உள்ளீடாகக் கொண்டிருந்தாலும், அழித்தல் தத்துவத்தை உட்குறிப்பாகக் கொண்ட தேர்த்திருவிழா சைவ அடியார்களுடைய உள்ளுணர்விற்கும் மன எழுச்சிக்கும் உற்சாகத்திற்கும் கரை காண முடியாதது

அழித்தலுக்கு அவ்வளவு ஆனந்தமா? என்றால் இங்கே அழித்தல் மலங்களாகும். மலமழிந்தால் சித்த சுத்தி உண்டாகும். 'தெருவில் சண்டை கண்ணுக்கு குளிர்ச்சி' என்பார்கள். இங்கேயும் சுவாமி தேரில் திருவீதி உலா எழுந்தருளினாலும் அகத்தே அடியவர்களுடைய மன அழுக்கு நீக்கும் போர் நிகழுகிறது. அதனால்தான் மெய்யடியார்கள் எங்கிருந்தாலும் ஆலயத்திற்கு ஓடோடி வந்து ஒரு கணப்பொழுதாவது மல நீக்க உணர்வை பெறுகிறார்கள். அதுவே ஆனந்தம்.

சிவபிரான் முப்புர அசுரர்களை விலக்கி முப்புரங்களைத் தகித்தது மும்மலகாரிய நாசத்திற்குத் தேர்த்திருவிழாவைக் கொள்ளலாம். இதுவே முதன்முதல் சிவபிரான் தேரில் எழுந்தருளியதாகும்.

நாடு நலம் பெற வாழ்வு வளம் பெற மெய்யடியார்களின் இருதய தாமரை மலர வெள்ளோட்ட வைபவமும் புதுத்தேர்ப்பவனியும் திருவருள் வழி நிற்பதாக.

**- சிவ. சண்முகவடிவேல்**


**பாபு சிற்றுண்டி அகம்**
புன்னாலைக்கட்டுவன் தெற்கு

**சிற்றிரெக்ஸ்**
சகலவித துணிவகைகள்
நல்லூர் கோவிலடி

**இ. சண்முகநாதன்**
பலசரக்கு வியாபாரம்
மாக்கற் லேன்,
சுன்னாகம்

**இராசையா & சன்ஸ்**
வாசனைத் திரவியம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(9131)

பலசரக்கு வியாபாரம்
மாக்கற் லேன்,
(9131) சுன்னாகம்

வாசனைத் திரவியம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

இருதய தாமரை மலர வெள்ளோட்ட வைபவமும் புதுத்தேர்ப்பவனி யும் திருவருள் வழி நிற்பதாக.

- சிவ, சண்முகவடிவேல்

---

ஓம் விராட் விஸ்வபிரமனே நம

# இன்று மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா



நிகழும் மங்களகரமான பவவருடம் ஆவணித்திங்கள் 3ஆம் நாள் (19-8-94)
வெள்ளிக்கிழமை காலை 8. 05மணி முதல் 9. 04 மணி வரை வரும்
கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில்

சந்தோஷம் தெரு 194-ம் இலக்க கட்டடத்தில்
(கஸ்தூரியார் வீதி)



# கணேசா நகையகம்



நிறுவனத்தை ஆரம்பிக்க திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவரும் சமுகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

194, சந்தோஷம் தெரு.
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்கள்:
ச. கணேசமூர்த்தி நகைத் தொழிலகம்
55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(9142)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

### சிந்தனைக்கு..

உண்மைகளைப் புறக்கணிப்பதால், அவை உண்மைகளாய் இல்லாமற்போவதில்லை

- அல்டஸ் ஹக்ஸ்லி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 19-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## இனப்பிரச்சினைக்கு தெளிவான பதில்

சிறிலங்காவின் பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு முடிவுற்று தேர்தல் முடிவுகளும் வெளியாகியுள்ள நிலையில் இனப்பிரச்சினை தொடர்பாக சிங்கள மக்களின் நிலைப்பாடு என்ன? என்ற கேள்விக்குரிய பதிலை கண்டறிய வேண்டிய அவசியமும் உள்ளது. இதற்கு சிங்கள மக்களின் பதிலும் தெளிவாகவே உள்ளது.

தேர்தல் களத்தில், இனப்பிரச்சினை விடயத்தில் பொது ஜனஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தெளிவாகவே தமது நிலைப்பாட்டை முன்வைத்திருந்தன. இதில், பொ. ஐ மு. இனப்பிரச்சினைக்கான தீர்வுபேச்சுவார்த்தை மூலமான அரசியற்தீர்வு-தீர்வுத்திட்டத்தை முன் வைக்காதது வேறு விடயம் - எனத் தெளிவாகவே கூறிவந்தது. இதேசமயம் ஐ. தே. க. இராணுவத்தீர்வே முடிந்த முடிவு எனத் தெளிவாகப் பிரகடனப்படுத்தியிருந்தது.

இந்நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணப்பட வேண்டும் என்பதை தெளிவாகவே வெளிக்காட்டியுள்ளமை புலப்படுகின்றது. அரசியற் தீர்வை ஆதரிக்கும் பொ. ஐ மு. அறுதிப் பெரும்பான்மை பெறாதுவிட்டாலும், சிங்கள வாக்காளர்களில் பெரும்பான்மையினர் இனப்பிரச்சினை விடயத்தில் பொது. ஐ. முன்னணியினை ஆதரித்தமை வெளிவந்துள்ளது. இதனை பொ ஐ மு. வெற்றிபெற்ற தேர்தல் தொகுதிகள், மாவட்டங்கள் என்பனவற்றில் இருந்து தெளிவாக கண்டுகொள்ள முடியும்.

பொ. ஐ. முன்னணி தேர்தலில் வெற்றி பெற்ற மாவட்டங்களான அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை, கம்பஹா, கொழும்பு, குருணாகல், புத்தளம், மாத்தளை, மொனராகல, அனுராதபுரம், பொலனறுவ, இரத்தினபுரி என்பன சிங்கள வாக்காளர்களைப்பெரும்பான்மையாகக் கொண்டதோடு அவர்களே தேர்தலை தீர்மானிக்கும் சக்திகளாக உள்ள மாவட்டங்களாகும். ஐ. தே. க வெற்றிபெற்ற மாவட்டங்களில் தேர்தலை தீர்மானிப்பதில் சிங்களவர் அல்லாதவர் முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் பெரும்பான்மையான சிங்கள வாக்காளர்கள் பொ. ஐ மு.வை ஆதரித்ததன் மூலம் இனப்

# மன்னாரில் இருந்து புலிகள் கடல்வழியாக தப்பிச் சென்றனர்

### சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

மன்னாரில் பி. எம். சி. கட்டட பொலிஸ் முகாமைத் தகர்த்த புலிகள் தாக்குதல் முடிந்தபின் கடல் வழி மூலமாக தப்பிச் சென்றதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதலில், இரண்டு அதிகாரிகள் உட்பட பதினொரு பொலிசார் கொல்லப்பட்டதுடன் பத்துப் பொலிசார் வரை படுகாயமடைந்ததாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்தாக்குதலை மேற்கொள்வதற்காக பேசாலையிலிருந்து மன்னார் நோக்கி வந்த பயணிகள் பஸ் வண்டியை வழியில் நிறுத்தி பயணிகளை இறக்கிவிட்டு அதே பஸ் வண்டியில் சீருடையில் புலிகள் ஏறிச் சென்றதாகவும் அவை தெரிவித்தன.

பொலிசார் மற்றொரு பயணிகள் பஸ் வண்டியொன்றைச் சோதித்து அனுப்பிவிட்டு பின்னால் வந்த பஸ் வண்டியை வழிமறித்தபோது அதில் வந்த புலிகள் பொலிசார் மீது பலத்த தாக்குதலை மேற்கொண்டதுடன் கட்டடத்தையும் குண்டு வைத்து தகர்த்தனர் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஐ. தே. க. - பொ. ஐ. மு. எவருக்கும் ஆதரவில்லை

(கொழும்பு)

சிறிலங்கா முற்போக்கு முன்னணி எந்த ஒரு பிரதான கட்சியுடனும் இணையப்போவதில்லை என அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் மேற்படி கட்சி ஒரு ஆசனத்தை கைப்பற்றியுள்ள போதும் தற்போது ஆட்சியை அமைப்பதற்கு தமது கட்சி தேர்தலின் முன்னர் தெரிவித்த கருத்தில் தெளிவாக இருப்பதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை எதிர்காலத்தில் சிறிலங்காவின் மூன்றாவது ஓர் அணியாக தாம் உருவாவது இக்கட்சியின் நோக்கமாகும் என்றும் எனவே எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் தாம் போட்டியிடுவதே தமது கட்சியின் நிலை என தெரிவித்துள்ளார்.

## முழுநிலா அறிவியலரங்கு

(யாழ்ப்பாணம்)

வலிதெற்கு பிரதேச சபையும் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழுநிலா அறிவியலரங்கு நாளை சனிக்கிழமை பி.ப. 4 மணியளவில் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச செயலகங்களின் அமைப்பும் அவற்றின் செயற்பாடுகளும் பற்றி வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் ஆ மகாலிங்கம் கருத்துரையாற்றுவார்.

## மண்டலாபிசேகம்

(குருநகர்)

யாழ். வண்ணை மேற்கு நாவலடி அருள்மிகு பேச்சி அம்பாள் தேவஸ்தான மண்டலாபிசேகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஜூலை 15 ஆம் திகதி நடைபெற்ற மகாகும்பாபிசேகத்தை தொடர்ந்து நடைபெற்றுவரும் மண்டலாபிசேக பூர்த்திவிழா இம் மாதம் 31ஆம் திகதி புதன்கிழமை நடைபெற இருக்கிறது. (21)

## நூல்வெளியீடு

(குருநகர்)

அருட்கவி சீ. வினாசித்தம்பிப்புலவர் எழுதிய ''சீறிரங்கம்'' தலவரலாறும் தோத்திரங்களும் அடங்கிய நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு அளவெட்டி, நாகேஸ்வரம்

## கோவிலில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை விசுவேசபிள்ளையார் ஆலய ஓட்டைப் பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் பெறுமதிமிக்க தங்க நகைகள் மற்றும் வெள்ளி கிரீடம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு நடந்துள்ளது.

இவ்வாலயம் இதற்கு முன்னரும் பல தடவைகள் திருடரின் கைவரிசைக்கு இலக்கானது குறிப்பிடத்தக்கது,

## பட்டதாரி பயிற்சி நெறி

சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் பட்டதாரி பயிற்சி நெறி ஒன்று அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியில் மரபுரீதியாக இவ் வைத்தியத்தில் ஈடுபாடுஉள்ளவர்களுக்கும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் மருந்தாளர் பயிற்சி முடித்தவர்களுக்கும்க.பொ.த உ/த தகுதியுடைய ஆண்/பெண் இருபாலாரும் இப் பயி

## மஹோற்சவம்

(குருநகர்)

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் சிறீநாகவரத நாராயணர் தேவஸ்தான மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 11. 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறும்.

இம்மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ரதோற்சவமும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் 31 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும் (21)

## கும்பாபிசேகம்

(குருநகர்)

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு சிறீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் அமைந்துள்ள சிறீரங்கநாதர் ஆலய கும்பாபிசேகம் இன்று காலை 6 மணி தொடங்கி நடைபெறும்.

நாளை காலை 8 05-9 00 மணிவரை ஸ்தூபி அபிஷேகம், மூலாலயபிரவேசம், சிறீதேவி பூமதேவி சிறீரங்கநாத சுவாமிக்கு மகா கும்பாபிசேகம் நடைபெறும் (21)

## தலைமைத்துவ கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே தலைமைத்துவம் மற்றும் நல்லொழுக்கப் பண்புகளை வளர்த்தெடுப்பதன் ஊடாக சிறந்த சமுதாயமொன்றை உருவாக்கும் நோக்குடன் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி வை எம். சீ. ஏ. மாணவர் தலைவர்களுக்கான இருநாள் பயிற்சிக் கருத்தரங்குகளை 'ஒட்லி' மண்டபத்தில் அண்மையில் நடாத்தியது.

யாழ்ப்பாணக் கல்லூரி வர்த்தக விரிவுரையாளர் ஜி நடராஜாவினால் நடாத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கில் மாவட்ட மட்டத்தில் பதினொரு பாடசாலைகள் பங்குபற்றின,

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துமூல போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 2-ம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வலயம் - 1 இல் நடைபெறும் இவ் எழுத்துத் தேர்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இந் நியமனத்திற்கு விண்ணப்பித்தோர் தமக்குரிய அனுமதி அட்டைகளை இம் மாதம் 29-ம் திகதி காலை 9.00 மணி முதல் நல்லூரில் அமைந்துள்ள கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர் நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கேட்டுள்ளார். (பா)

## நிர்வாகசேவை அதிகாரிகள் சம்பள உயர்வு அறிவிப்பு

(கொழும்பு)

நிர்வாகசேவை அதிகாரிகளுக்கான சம்பள உயர்வு இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை நிர்வாக சேவை, இலங்கை எந்திரிகள் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கமத்தொழில் சேவை, இலங்கை மிருக வளர்ப்புச் சேவை. இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கைகணக்காளர் சேவை, நிபுணர்கள், நிபுணர்கள் அல்லாதோருக்கான வைத்தியசேவை ஆகிய சேவைகளிலுள்ளோருக்கே சம்பள உயர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

செயலாளர் 143,400—8×7800—205,800,
மேலதிக செயலாளர் 135.600—8×7800-198000
வகுப்பு i 105,000-10×4800—153,000,
வகுப்பு ii ,தரம் i 80,400—7×3000—101400
வகுப்பு. ii தரம் ii 53,880 — 15×1560—77280

ஆயினும் இச்சம்பள உயர்வில் இலங்கை இறைவரிச் சேவை, இலங்கை சுங்க சேவை, தபால் திணைக்களச் சேவை, புகையிரதச் சேவை என்பவை உள்ளடக்கப்படவில்லை.

## காட்சியகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் காட்சியகம் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது.

இங்கு கால்நடைப்பகுதி விலங்கு வேளாண்மை பகுதி, கடல்வளபகுதி விவசாயப் பகுதி, சூழல் பாதுகாப்பு பகுதி ஆகியனவும் இடம் பெற்றுள்ளன. (88)

## மாதாந்த அமர்வு

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்த அமர்வு நாளைபேரவை மண்டபத்தில் இடம்பெறும். உறுப்பினர் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-08-19
வெள்ளி இரவு

8.01-கலைமஞ்சரி -நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது'' வைகை'' கவிதைத் தொகுதி அதனைஅடுத்து சிறுகதை -''சிரித்துக் கொண்டே அழுகிறான்'' நிறைவாக கவிதை -''நாளைப் பொழுது பற்றி நாலுவரி''
8.25 - கணப்பொழுது
8.30 -செய்திகள்
8.40 -அரசியல் அரங்கம்
8.50 - வாத்தியகானங்கள்

## கெம்பிய ஆட்சியாளரால்

முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் பெரும்பான்மையான சிங்கள வாக்காளர்கள் பொ.ஐ.மு.வை ஆதரித்ததன் மூலம் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியற் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை தெளிவாக உணர்த்தியுள்ளனர். இதேசமயம் இரத்தினபுரிமாவட்டத்தில், சிங்கள மக்கள் முடிவானது இனப்பிரச்சினை தீர்விற்கு அரசியற் கட்சிகள் வடக்கு-கிழக்கு இணைப்பு வரைசென்றாலும் தாம் அதை ஆட்சேபிக்கப் போவதில்லை என்பதை தெளிவுபடுத்துவதாகவும் இருந்தது.

இதனை இரத்தினபுரி மாவட்டத்தில் பொ.ஐ முன்னணி வேட்பாளராகப்போட்டியிட்ட வாசுதேவ நாணயக்காராவிற்கு சிங்கள மக்கள் அம்மாவட்டத்திலேயே கூடுதலான விருப்பு வாக்குகளை அளித்ததன் மூலம் தெளிவுபடுத்தியுள்ளனர். வாசுதேவ நாணயக்கார பொ.ஐ.மு வேட்பாளராகப் போட்டியிட்டு இருப்பினும் இனப்பிரச்சினைத்தீர்விற்கு அவர் தனிப்பட்ட ரீதியிலும், முன்னர் அங்கம் வகித்த கட்சி ரீதியிலும், தமிழர் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும், தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவராவார்.

அத்தோடு தேர்தல் பிரசாரக் காலத்தில் தொலைக்காட்சியில் ஐ.தே.க. உறுப்பினர் ஒருவருடன் நடத்திய விவாதத்தின் போதும் வடக்கு-கிழக்கு இணைப்பையும் தமிழர் சுயநிர்ணய உரிமையையும் எதுவித தயக்கமுமின்றி ஆதரித்திருந்தார்.

இந்நிலையிலும் சிங்கள மக்கள் வாசுதேவாவிற்கு உயர்ந்தளவு விருப்பு வாக்கை அளித்தமையானது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும், அதற்காகவடக்கு-கிழக்கு இணைவதை அவர்கள்ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதையுமே காட்டுவதாகவுள்ளது.

அத்தோடு இதற்கு அரசியல்வாதிகளோ அன்றி பௌத்தபீடங்களோ எதிர்ப்பினும் அதை தாம் பொருட்படுத்தப் போவதில்லை என்பதையும் உணர்த்தியுள்ளனர். இதனை வாசுதேவாவின் நிலைப்பாட்டை பௌத்த பீடங்கள் எதிர்த்த போதும் மக்கள் அவரை அங்கீகரித்ததில் இருந்தே புரிந்துகொள்ள முடியும்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றிற்கு இனிமேல் போடப்படும் முட்டுக்கட்டையானது சிங்கள மக்களிடம் இருந்து எழுகின்றது என்று எவரும் கூறிவிட முடியாது. இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதற்கு யாராவது தடையாக இருப்பார்களேயானால் அது அரசியல்வாதிகளும், பௌத்தபீடங்களைச் சேர்ந்தவர்களுமாக இருப்பார்களே ஒழிய சிங்கள மக்களாக இருக்கமாட்டார்கள். என்பதே தேர்தல் முடிவாகும் இந்நிலையைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வுகாண சிங்கள அரசியற் தலைவர்கள் யாரும் முன்வருவார்களா என்பதே இன்றுள்ள கேள்வி.

திரங்களும் அடங்கிய நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு அளவெட்டி, நாகேஸ்வரம் சிறீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நடைபெறும். (21)

களின் மருந்தாளர் பயிற்சி முடித்தவர்களுக்கும்க.பொ.த உ/த தகுதியுடைய ஆண்/பெண் இருபாலாரும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது- (88)

# மசூதியை தாக்க முயன்றவர் ஈரானில் பகிரங்க தூக்கு

ஈரானிய தெற்கு நகரத்தில், மசூதி ஒன்றை தாக்க முயன்ற ஒருவர் பகிரங்கமாக தூக்கிலிடப்பட்டார்.

ஈராக்கிலுள்ள முஜாகுதீன் கல்க்என்ற எதிர்க்கட்சிக் குழுவின் அங்கத்தவரான அவர் தூக்கிலிடப்பட்டபோது அங்கு கூடியிருந்தவர்கள், அமெரிக்காவுக்கு மரணம் எனக் கோசமிட்டனர்.

தூக்கிலிடப்படுவதற்கு முன்பான விசாரணையில், முஜாகுதீன் அமைப்பைச் சேர்ந்த தான் ஈராக்கில் பயிற்சி பெற்றதாகவும் தெரிவித்தார்.

# கியூபா அகதிகள் வருகை அமெரிக்காவுக்கு சிக்கல்

## -அதிகாரிகள் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

கியூபாவிலிருந்து பெருமளவில் அகதிகள் வெளியேறி அமெரிக்கா வருவதை கூடியவரை தடுக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என அமெரிக்க அட்டர்னி ஜெனரல் ஜெனட் ரெனோ கூறியுள்ளார்.

1980-ல்,1,25,000 கியூபா மக்கள் தென்புளோரிடா வந்ததை அனுமதித்தது போல் இனியும் நடைபெறாது. தகுந்த ஆவணங்கள் இன்றி வரும் கியூபா வாசிகள் தடுக்கப்படுவதுடன், அவர்கள் பிரயாணம் செய்யும் கப்பலும் கைப்பற்றப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கியூபா அகதிகள் பிரச்சினை புளோரிடா மாநிலத்தில் பெரும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளதாகவும் அம்மாநில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# குற்றத் தடுப்பு மசோதா அமெரிக்காவில் நிராகரிப்பு

(வாஷிங்டன்)

ஜனாதிபதி கிளிண்டனின் சுகாதார பராமரிப்புச் சீர்திருத்தச் சட்டம் காங்கிரசில் சிக்கலில் இருக்கும் அதே சமயம் அவரது குற்றத்தடுப்பு மசோதாவை, பிரதிநிதிகள் சபை 225-210 வாக்குகளால் தோற்கடித்தது.

3,300 கோடி டாலர் குற்றத் தடுப்புத் திட்டம் சம்பந்தமான மசோதாவுக்கு கிளிண்டனும் உயர் அதிகாரிகளும் தீவிரமாக ஆதரவு தேடி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

19 வகையான ஓரளவு தானே இயங்கும் ஆயுதங்களை சட்டவிரோதமாக்க வேண்டும் என மசோதா கோரியிருந்தது. மேலதிகமாக, 1,00,000 பொலிசாரைத் திரட்டவும், சிறைகளைக் கட்டவும், இம் மசோதா வழி செய்ய முயன்றது.

# கெம்பிய ஆட்சியாளரால் ஊழல் அதிகாரிகள் கைது

(பன்ஜீல்)

கெம்பியஇராணுவம், தனது நாட்டின் ஆட்சிசபையிலிருந்த லெப்டினன்ட்ஜெனரல்அலாஜி கண்டேயை கைது செய்திருக்கிறது.

ஊழலை ஒழிப்பதாக கூறி கெம்பிய இராணுவ அரசாங்கம் சென்ற மாதம் அதிகாரத்தைக் கைப்பற்றியது தெரிந்ததே.

இதுவரை, 28 அதிகாரிகள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள், கடந்த ஜூலை 22-ம் திகதி லெப்டினட் யஹ்யா ஜம்மே தலைமையிலான, இளம் இராணுவ அதிகாரிகள், ஜனாதி டவ்டா ஜவாராவின் ஆட்சியைக் கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து, பெரும்பாலான அமைச்சர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பதுடன், ஊழல்பற்றிய விசாரணையை எதிர்நோக்கியும் உள்ளனர்.

8.30 -செய்திகள்
8.40 -அரசியல் அரங்கம்
8.50 - வாத்தியகானங்கள்

**1994-08-20**
**சனி காலை**

7.02 -மாவீரவணக்கம்
7.15 -நீங்கள் கேட்டவை
7 30 -செய்திகள்
7.35 -பத்திரிகைச் செய்திகள்
7 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# பாக்.குடன் முரண்பாட்டை தீர்க்க மூன்றாம் நாடு தேவையில்லை

## இந்திய துணை வெளிவிவகார அமைச்சர்

(டில்லி)

பாகிஸ்தானுடனான கருத்துவேறுபாடுகளை தீர்த்துவைப்பதற்கு மூன்றாம் நாடு ஒன்றின் தலையீடு தேவையில்லை என இந்திய வெளிவிவகார துணையமைச்சர் ஆர். எல். பாட்டியா தெரிவித்துள்ளார்-

பாகிஸ்தானுடனான சகல பிரச்சினைகளையும் சிம்லா உடன்படிக்கையின் கீழ்தீர்த்துவைக்க இந்தியா தயாராயுள்ளது இந்நிலையில், எந்த ஒரு மூன்றாம் நாட்டின் தலையீடும் தேவையில்லை காஷ்மீர் பிரச்சினையில் ரஷ்யா தன் போக்கை மாற்றிக் கொள்ளுமாறு பாகிஸ்தான் ரஷ்யாவைக் கேட்டுக் கொண்டிருப்பதான செய்தியும் இந்தியாவுக்குத் தெரியும்.

ஆனால் ரஷ்யா அரசாங்கம், தனது நிலைப்பாட்டில் மாற்றமெதையும் காட்டாது சிம்லா உடன்பாட்டின் கீழ் பேசித்தீர்வு காண்பதையே ரஷ்யா என்றும் ஆதரிக்கும் எனவும் பாட்டியா தெரிவித்துள்ளார்.

# புருண்டியில் வன்முறை ஐ.நா நிறுத்த முயற்சி

(புஜூம்புரா)

புருண்டியில் மூண்டுள்ள கலகத்தை தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முயற்சி செய்து வருகின்றது இதற்காக துரித நடவடிக்கையை எடுப்பதற்கு பொதுச்செயலாளர் பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி ஆலோசித்து வருவதாகவும் ஐ.நா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புருண்டியில் கடந்த சில வாரங்களாக இடம் பெற்று வரும் மோதல்களில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

ருவாண்டாவில் தலைதூக்கிய இன நெருக்கடி காரணமாகப் பலர் புருண்டிக்கு அகதிகளாகச் சென்றுள்ள வேளையில். இக் கலவரம் ஆரம்பமாகியிருப்பது குறித்து ஐ-நா அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் விரைவில் இல்லை

(டில்லி)

பொதுத் தேர்தல் விரைவில் நடத்தப்படமாட்டாது எனஇந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் அறிவித்துள்ளார் சிரேஷ்டகாங்கிரஸ்உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் இதை அறிவித்தார்-

இதன்படி, 1996-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு சில மாதங்களுக்கு முன்னதாக வேண்டுமானால் தேர்தல் நடத்தப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்

## பாராளு மன்றிற்கு

### மாவட்டம் : காலி

பொ. ஐ. மு.

அமரசிறி தொடங்கொட - 1,76 151
றிச்சர்ட் பத்திரான - 1,16,893
பியசேன கமகே - 67,033
கமகே றொயல் பத்மசிறி - 52,370
நந்ததாச குணசிங்க - 46,948
அசோகா வீரசிங்க தசில்வா- 45,022

ஐ. தே. க.

வஜீர அபேவர்த்தன - 83,373
சரத் குணவர்த்தன - 56,568
உபாலி அமரசிறி - 53,577
ரூபா கருணாதிலக - 52,577

### புத்தளம்

பொ. ஐ. மு.

கொட்பிறி ஜோசப் பெர்ணான்டோ - 55,372
ஜோன் ஜுசஸ் பீரிஸ் - 49,116
தயாசிறி த. திசேரா - 42,366
டி. எச். தஸநாயக்கா - 39,793

ஐ. தே. க.

பெஸ்டஸ் பெரேரா - 75.417
அசோகா வடிகமங்காவ - 47,003
ஹரல்கேரத்ஜேம்ஸ்எட்வட் - 37,538

### மாவட்டம்: குருநாகல்

பொ- ஐ. மு:

ஆர்- எம், எஸ் பி நாவின்ன- 122611
டீ. பி. ஏகநாயக்க - 59313
ஆர். எம். முனிதாச பிரேமசந்திர - 58293
சாலிந்த திசாநாயக்க - 57641
அனுரபிரியதர்சனயாப்பா - 57127
பஸ்நாயக பந்துல பஸ்நாயக்க - 56609
பீட்டர் விக்கிரமசிங்க - 49383
ஆர்-எம். ஜயசேன ராஜகருணா- 47073

ஐ. தே- க.

காமினிஜயவிக்கிரம பெரேரா- 109900
அதிகாரி பியசோம உபாலி - 54871
அமரா பியசீலி ரத்நாயக்க - 53421
அகமட் அசன் முகமட் அலவி - 52381
ஜயதேவ சந்திரவன்ச - 51691
தசநாயக்க பண்டாரநாயக்க - 50901
ஹேரத் லொக்கு பண்டார - 50535

### மாவட்டம் பொலநறுவ

பொ. ஐ. மு.

மைத்திரிபால சிரிசேன - 62962
திலகரட்ண பண்டார - 26467
எச். எம். என். கேரத் - 26215

ஐ.தே.க.

ருக்மன் சேனாநாயக்கா - 39439
எச். ஜி. பி. நெல்சன் - 45648

### மாவட்டம் நுவரெலியா

ஐ.தே.க.

முத்துசிவலிங்கம் - 85490
சு. சதாசிவம் - 83363
ஆறுமுகம் ராமநாதன் தொண்டமான் - 75297
றேனுகா கேரத் - 49473
ரொகான் திஸ்ஸ - 40513

பொ.ஐ.மு.

எஸ். பி. திசாநாயக்கா - 38372
சந்திரசிறி பண்டார - 38092

சுயேச்சை குழு

பீ. சந்திரசேகரன் - 23453

### மாவட்டம்: கண்டி

ஐ. தே. க:-

காமினி திசாநாயக்க - 1, 98,207
முதியன்சலாகேலக்கி திசாநாயக்க ஜெயவர்த்தன- 66,340

### மாவட்டம்: களுத்துறை

பொ ஐ மு:

பி விக்கிரமநாயக - 88213
அபேவீர சுமித்த பிரியங்கனி - 85661
றெஜினோல்ட் குரே - 85297
சாந்தகுமார வெலிகம - 79056
எதிரிவீர பிறேமரட்ண - 70041
அனில் முனசிங்க - 56071

ஐ தே க:

இம்தியாஸ்பாக்கீர்மார்க்கார் - 68519
திலக் கருணாரத்ன - 63206
சரத் ரணவக்க - 60506
மகிந்த புத்ததாச சமரசிங்க - 59150

### மாவட்டம்: பதுளை

ஐ தே க

டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார - 78845
ரவீந்திர சமரவீர - 42309
டி வி சென்ன் - 41683
லக்ஸ்மன் செனவிரட்ண - 41320
ஆர். எம். ரத்னாயக்க - 40293

பொ. ஐ. மு

டிலான் பிரியன்ஞன் - 54150
சமரவீர வீரவன்னி - 44595
ஹேமாரட்ணாயக்க - 40873

### மாவட்டம் அனுராதபுரம்

பொ ஐ மு

பேர்ட்டி பிரேம்லால் திசாநாயக்க - 78.792
புஞ்சிபண்டா திசாநாயக்க - 46 856
ஹேரத் பண்டா சமன்சிங்க - 45,256
திஸ்ஸவிஜயரட்ண ஹெரலியட்ட - 34,849
சாந்த பிறேமரட்ண - 43,167

ஐ தே க

சந்திரசோம பண்டாா - 66,538
ஏ. எம். எஸ் அதிகாரி - 44,650
பி. ஹரிசன் - 34,666

### மாவட்டம் கொழும்பு

பொ.ஐ மு

அத்துலத்முதலி சிறிமானி - 148727
விக்டர் குணரத்ன - 114756
சிறிபால த சில்வா - 111730
ஜீவன் குமாரணதுங்க - 95767
கிங்சிலி விக்கிரமரத்ன - 95077
அப்துல் பௌசி - 72294
பேனாட்குரே - 66976
பிரேமசந்திர - 63421
இந்திக குணவர்த்தன - 58753
சேன. லங்காதிலக - 54321
பேணாட் சொய்சா - 50872

ஐ.தே.க.

ரணில் விக்கிரமசிங்க - 291194
ஒசி அபயகுணசேகர - 98022
சுசில் முனசிங்க - 61610
காமினி லொகுகே - 47058
கருணாசேன கொடிதுவக்கு - 46134
எம் எச். மொகமட் - 44527
வீரசிங்க மல்லிமாராச்சி - 44322
டிரோன் பெனான்டோ - 42872
குணசேகர பிரேமரத்ன - 40646

### மாவட்டம் இரத்தினபுரி

பொ ஐ மு

வாசுதேவ நாணயக்கார - 62989
பவித்திரதேவி வன்னியாராச்சி- 62979
நில்லா ஹெநாலந்த - 52371
ஆராச்சிகே ஜயதிஸ்ஸ - 48450
உடகம லியனகே - 47122

# பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண சிங்கள மக்கள் வழங்கிய ஆணை

## தேர்தல் வெற்றி குறித்து வாசுதேவ

(கொழும்பு)

சிங்கள மக்கள் முன்னிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியும் வேறு சிலரும்இனவாதப் பேச்சுக்களைப் பேசிய போதும் சிங்கள மக்கள் பெரும் பான்மையாக வாழும் பகுதிகளில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு கணிசமான வெற்றி கிடைத்துள்ளது. இது வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு சிங்கள மக்கள் கொடுத்துள்ள ஓர் ஆணை என்று நான் கருதுகிறேன் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினை அவர்களின் அபிலாசைகளுக்கு இணங்கவே தீர்க்கப்பட வேண்டும் என்பதனை இரத்தினபுரி மாவட்டத்தில் எனக்கு வழங்கிய அதிகப்படியான விருப்பு தெரிவு வாக்குகளிலிருந்து உறுதி செய்யப்படுகிறது.

எனவே இக்கொள்கையில் இருந்து தான் விலகப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை தன்னிடம் இருப்பதாகவும் எனவே இதற்காக தன்னால் செய்யக் கூடிய சகலவற்றையும் தான் செய்ய தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

### ஐ. தே. க.

இதனை தொடர்ந்து காமினி திசாநாயக்கா ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சிரேஷ்ட உறுப்பினர் சந்திப்பில் கலந்து கொண்டார் என்றும் இதில் ஐ. த. க. ஆட்சி அமைக்க கூடிய பாராளுமன்ற உறுப்பினர் பலம் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனை தொடந்து சிரேஷ்ஷ்ட உறுப்பினர்கள் இடையே கடுமையான வாக்குவாதம் நடைபெற்றதாக தெரிய வருகின்றது

### அலரி

கடந்த 16-ம் திகதி சிறிலங்காவில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க தனது பிரதமர் பதவியை இழந்தது தெரிந்ததே.

இவர் அலரி மாளிகை உத்தியோகத்தர்கள், மற்றும் பாதுகாப்பு படையினருக்கு நன்றி தெரிவித்துவிட்டு தனது தனிப்பட்ட கார் ஒன்றில் அவர் அலரிமாளிகையிலிருந்து செய்தியாளர் முன்னிலையில் வெளியேறினார்.

### பிரதமராக

ச்சு பதவிகளுக்கான சத்தியப்

# விஜேதுங்கா 'கோரிக்கை அஷ்ரப்பால் புறக்கணிப்பு

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் அரசியல் பேரத்தில் ஈடுபட்டு ஆட்சியைக் கைப்பற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் முயற்சி தோற்கடிக்கப்பட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அஷ்ரப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் பி. பி சிக்கு வழங்கிய பேட்டியில், தான் அம்பாறைக் கச்சேரியில் இருந்த போது ருக்மன் சேனநாயக்காவிடம் இருந்தும் ஜனாதிபதி செயலாளர் விஜய தாசவிடம் இருந்தும் வந்த தொலைபேசி அழைப்புக்கள் மூலம் தன்னை உடனடியாகக் கொழும்பு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதாகத்தெரி

### முயற்சி

விஜேதுங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்புடன் பேரம் பேசும் முயற்சியில் ஈடுபட முனைந்த போதும் அஷ்ரப் சந்திக்காததினால் அது தோல்வியில் முடிவுற்றது.

காமினி திசாநாயக்கா புளொட், மற்றும் கூட்டணியினரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்திய போதும், அவர்களும் ஒத்துழைக்க மறுத்துவிட்டதாகவும் தெரிகின்றது.

### மிகக்

மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்ட திருமதி சிறிமணி அத்துலத் முதலி ஒரு லட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து எழுநூற்று இருபத்து ஏழு வாக்குகளைப் பெற்றுள்ளார்-

### ஊர்தி

இம் மாதம் 30-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது

வித்தார்

அத்தோடு தான் உடனடியாக கொழும்பு வருவதற்கு அரசாங்கத்தால் ஹெலிகப்டர் ஒழுங்கு செய்யப்பட்டதாகவும் தெரிவித்த அஷ்ரப் தான் சந்திரிகாவைச் சந்திக்காது ஜனாதிபதி டி பி விஜேதுங்காவை சந்திக்க மறுப்புத் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்

இதைத்தொடர்ந்து, ஜனாதிபதியை சந்திப்பதை தவிர்த்த நான். ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்ற சந்திரிகா குமாரணதுங்க விடம், முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சந்திரிகாவின் தலைமைத்துவத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் கடிதத்தைக் கொடுத்தனுப்பியதாகவும் தெரிவித்தார்-

## 180 தமிழர் கைது

(கொழும்பு)

இத்தாலிக்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்க முற்பட்ட நூற்று எண்பதிற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்களை இத்தாலி பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் பெண்கள், சிறுவர்களும் உள்ளடங்குவதாக மேலும் தெரிய வருகின்றது.

### சந்திரிகா

- ★ சுனேத்திர ரூபசிங்க, முன்னாள் அமைச்சரும், ஐ தே. க. உறுப்பினருமான அனுரா பண்டாரநாயக்கா ஆகியோரின் சகோதரி.
- ★ ஆரம்ப கல்வி செயின் பீற்றேஸ் கல்லூரி
- ★ பாரிஸ் பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானப் பட்டதாரி.
- ★ பாரிஸ் பல்கலைக் கழகத்தில் தலைமைத்துவ டிப்ளோமா பட்டம்.
- ★ பாரிஸ் பல்கலைக் கழகத்தில் அபிவிருந்தி பொருளாதார கலாநிதி பட்டம்.
- ★ பாரிஸ் தொழில்நுட்ப கல்லூரியில் அரசியல், பத்திரிகை துறை விசேட பயிற்சி.
- ★ புதுடில்லி ஜவகர்லால்நேரு பல்கலைக் கழகம், பிரிட்டன் ஜெராட் பல்கலைக் கழகத்தில் விசேட விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர்.
- ★ 1989 ஏப்ரலில் மேல்மாகாண முதலமைச்சரானார்
- ★ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவியாக பதவி ஏற்றார்.


## பட்டிமன்றம்

தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்பது எவர் பாடலில் [பாட்டினால் பட்டிமன்றம்]

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | கவிஞர் கண்ணதாசன்

பொன் கணேசமூர்த்தி | அ. குமாரவேலு (B.A.)
நா. குழந்தைவேலு (M A) | M S. ஸ்ரீதயாளன் (B.A)
கனக நாகேஸ்வரன் (M.A.) | சி. சத்தியமூர்த்தி (B Sc)
பொன் மதிமுகராசா J.P. | க. கணேசலிங்கம் (அதிபர்)
ப. ஸ்ரீபதி ஆசிரியர் | ஜே. எஸ். முத்துலிங்கம்- (ஆசிரியர்)
திரு. S. கணேசலிங்கம் (ஆசிரியர்)

இடம்:- வள்ளுவன் சனசமூக நிலைய தான்தோன்றி

காமினி திசாநாயக்க - 1,98,207
முதியன்சலாகேலக்கி திசாநாயக்க ஜெயவர்த்தன- 66,340
அப்துல் காதர் அப்துல் ரஹீம் மொஹிதீன்- 66,136
ஏ. சி. எஸ். ஹமீட் - 61,906
ஏ. எம். கே. ரி. அத்தநாயக்க- 60,531
சரத் அமுனுகம - 53,997
சி. ராஜரட்ணம் - 38,343

பொ. ஐ. மு:
டீ. எம். ஜெயரட்ண - 1,001,058
அனுருத்த ரத்தவத்தை - 92,644
வில்சன் குருப்பு ஆராய்ச்சி - 63,969
லக்ஸ்மன் கிரியெல்லை - 59,463
எதிரிவீர வீரவர்த்தன - 53,192

## மாவட்டம்: மாத்தறை

பொ. ஐ. மு
திலக் தர்மகுமார - 76678
மகிந்த விஜேசேகர - 65769
சந்திரசிறி கஜேவீர - 62,852
மங்கள முனவீர - 61,574
அல்வின் சமரசிங்க - 57,453

ஐ. தே. க
ஆர். டீ. மெல் - 66,563
லக்ஸ்மன்அபேவர்த்தன - 52,294
ரண்மலு விமலசிறி - 33,078

## மாவட்டம்: அம்பாறை (திகாமடுல்ல)

ஐ. தே. க
பி. தயாரட்ணா - 45411
கலப்பதி சந்திரதாச - 40675
நிஹால் பக்மீவெவ - 29069

மு. கா
எம், எச். எம். அஷ்ரப் - 69076
யூ. எல். எம். மொஹிதீன் - 26194

பொ. ஐ. மு
ஹேரத் வீரசிங்க - 36276

## மாவட்டம்: அம்பாந்தோட்டை

பொ. ஐ. மு
மகிந்த ராஜபக்ச - 78,977
சமன் ராஜபக்ச - 63,698
நிருபமா தீபிகா ராஜபக்ச - 46,034
மகிந்த அமரவீர - 39,376

ஐ. தே. க
ஆனந்த குலரத்ன - 36,965
மேர்வின் சில்வா - 36,338

## மாவட்டம் மொனறாகலை

பொ ஐ மு
சுமதி குணவதி ஜெயசேன - 55,351
ஜெகத் புஷ்பகுமார - 31,663
அத்தனாயக முதியான் சலாகே ஜெயவர்த்தன - 27,080

ஐ தே க
தர்மதாச பண்டா - 44,956
மத்தும பண்டார - 36 747

நில்லா ஹெநாலந்த - 52371
ஆராச்சிகே ஜயதிஸ்ஸ - 48450
உடகம லியனகே - 47122
ஜோன் செனவிரட்ன - 44704

ஐ தே. க.
காமினி அத்துக்கோரள - 82869
புஞ்சி நிலமே - 57029
மைத்திரிபால - 49481
நந்தாமத்தியு - 47176

## மாவட்டம் திருகோணமலை

ஐ. தே. க.
மொகமட் மஃகுப் - 170 43
சுனில் சாந்தரணவீர - 15084

த. வி. கூ.
அ. தங்கத்துரை - 22410

மு. கா.
அப்துல் மஜீட்மொகமட்நஜீவ் - 21590

## மாவட்டம்: மட்டக்களப்பு

த வி கூ
ஜோசப் பரராசசிங்கம் 43350
பொன்னம்பலம் செல்வராசா 17450
கிருஷ்ணபிள்ளை துரைராசசிங்கம் 15974

மு கா
மொகமட் இஸ்புல்லா 12583

ஐ தே க
அலி சகீர் மௌலான சயீட் 11508

## மாவட்டம் வன்னி

ஜ ம. வி மு.
தர்மலிங்கம் சித்தார்த்தன் - 6376
சரவணபவன் சண்முகநாதன் - 5828
வைத்திலிங்கம் பாலச்சந்திரன் - 4515

ஐ- தே- க-
இராஜமனோகரிபுலேந்திரன் - 2217

பொ- ஐ- மு -
பிரேமரனகே சுமதிபால - 2975

மு- கா-
அபூபக்கர் எஸ். எஸ்- எம் - 4269

## மாவட்டம் யாழ்ப்பாணம

சுயேட்சை 2
நி, டக்ளஸ் தேவாநந்த் - 2091
அழகையா ராசலிங்கம் - 1110
உமாபதிசிவன் பாஸ்கரன் - 1056
ராஜேந்திரன் ராமேஸ்வரன் 1050
நடராஜா அற்புதராஜா 968
முருகேசு சந்திரகுமார் 798
தங்கராசா சிவதாசன் 456
சின்னையாதங்கவேல் - 398
எம். ஏ. கபூர் சபருல்லா 351

மு. கா.
எம். இலியாஸ் 1575

### பிரதமராக

ச்சு பதவிகளுக்கான சத்தியப் பிரமாணம் செய்ய இருப்பதாக தெரிய வருகின்றது-

இதனை தொடர்ந்து உள் நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர் மகாநாட்டை கூட இருப்பதாகவும் இதில் தனது எதிர்கால திட்டங்கள் தொடர்பாக மிகவும் தெளிவான விளக்கத்தை வழங்க இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன-

இதேசமயம் சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வு இம்மாதம் இருபத்தி ஐந்தாம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்படும் என சந்திரிகா குமாரண துங்கா தெரிவித்துள்ளார்-

ஜனாதிபதி டி-பி- விஜேதுங்கா இன்று தன்னை பிரதம மந்திரியாக அழைத்தது குறித்து தான் நன்றி தெரிவிக்க விரும்புவதாக்வும் தெரிவித்துள்ளார்-

### பாதுகாப்பு

கொண்ட ஜனாதிபதி ஆட்சிக்கும் பாராளுமன்ற ஆட்சிக்கும்இடையேபரஸ்பரம்கருத்து வேற்றுமைகள் தோன்றும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### பத்தாவது

யைச் சேர்ந்த 94 அங்கத்தவர்களும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த ஏழு அங்கத்தவர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 05 அங்கத்தவர்களும் இலங்கை முற்போக்கு முன்னணியைச் சேர்ந்த ஒரு அங்கத்தவரும் யாழ்மாவட்ட சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த ஒன்பது அங்கத்தவர்களும் நுவரெலியா மாவட்ட சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த ஒரு அங்கத்தவரும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த மூன்று அங்கத்தவர்களுமாக மொத்தம் 225 பேர் அங்கத்தவர்கள் அங்கம் வகிப்பார்கள்.

### ஊர்தி

இம் மாதம் 30-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை ஊர்தி உரிமையாளர்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத் தருகின்றனர்.

### பொ. ஐ. மு.

செய்தியில் தெரிவித்தது 5 உறுப்பினர்களைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியும், 3 உறுப்பினர்களைக் கொண்ட ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வெளியிலிருந்து ஆதரவளிக்க ஏற்கனவே முன்வந்துள்ளன.

### பொ. ஐ. மு. பெரும்

லாளர் தர்மசிறிசேனநாயக்க ஆகியோரிடையேநடைபெற்ற சந்திப்பின் போது இக் கருத்தை தெரிவித்துள்ளார்,

மேலும் தனக்கு இது குறித்து பூரண திருப்தி இப்பதாகவும் இன்று பிற்பகல் சுப வேளையில் பதவியை ஏற்கும்படி சந்திரிகாவிற்கு ஆலோசனையும் தெரிவித்துள்ளார்.

### வடக்கு கிழக்கு

தந்தை, தாய் ஆகியோர் பிரதமர்களாக கடமையாற்றும்போது நான் வீட்டில் அவர்களது நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியுள்ளேன்.

சிறிலங்கா மக்கள் தன் மீதும் தனது கட்சி மீதும் கொண்ட நம்பிக்கைக்கு மாறாக நடக்க மாட்டேன் என்றும் சிறிலங்காவின் அரசியலில் புதிய ஒரு சகாப்தத்தை ஏற்படுத்துவதே எனது நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

மிகுந்த மகிழ்ச்சியான நிலையில் காணப்பட்ட அவர் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை காண்பது என்ற தனது முடிவில் எந்த மாற்றமும் ஏற்படாது எனவும் தெரிவித்தார்.

ப. ஸ்ரீபதி ஆசிரியர் கே. எஸ். முத்துலிங்கம்-
திரு. S. கணேசலிங்கம் (ஆசிரியர்) (ஆசிரியர்)
இடம்:- வள்ளுவன் சனசமூக நிலைய தான்தோன்றி ஞானவைரவர் கோவில். பத்திரகாளி கோவிலடி வண்ணார்பண்ணை.
காலம்:- 19-8-94 வெள்ளிக்கிழமை (இன்று) இரவு 8 மணி
)சி/10144) 8-ம் திருவிழா உபயகாரர்

யாழ் ஸ்ரீதர் அகலத்திரையில்
இன்று முதல்
அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க
தினசரி காலை 10-30 மணிக்கு மட்டும்
"மண்ணுக்காக"
தினசரி மாலை 4-00 மணி, 6-00 மணி காட்சிகளாக
CHUCK NORRIS
நடித்த
BRADDOCK
MISSING IN ACTION - III
(தாக்குதல் சித்திரம்)
ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில்
பி. ப. 2-00 மணிக்கு மட்டும்
"ஒளி வீச்சு"
யூன் - 94
காண்பிக்கப்படும். (சி-10131)

## மரண அறிவித்தல்

### சபாபதிப்பிள்ளை திருஞானசம்பந்தர்

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், மலேசியாவை வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை திருஞானசம்பந்தர் 04-08-94-ல் காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (பொறியியலாளர், மலேசியா), டாக்டர் தேவராணி (அவுஸ்திரேலியா), டாக்டர் ரதி (மலேசியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகா (விரிவுரையாளர், மலேசியா), காலஞ்சென்ற மகேசன், டாக்டர் தவராசா (மலேசியா) ஆகியோர்ரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-08-94-ல் மலேசியாவில் நடைபெற்றன, இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பரமேஸ்வரி
(பெறாமகள்)

நந்தாவில்,
கொக்குவில் (9148)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, -31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது-